# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 153 of 2014

Deposition of witness for Prosecution PW2
Defence
Court

Name : ராமச்சந்திரன்
Father Name : கிருஷ்ணசாமி
Village :விருதுநகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :56

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of March 2026.

எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் டிவி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராமதாஸ் தெரியும். அ.சா.1 சோப்பு வியாபாரம் செய்கிறார், இந்து முன்னணி அமைப்பில் உள்ளார். விநாயகர் சதுர்த்தி திருவிழாவை அ.சா.1 நடத்துவார். விநாயகர் சிலையை வீதியில் வைத்து கொண்டு வரும் போது காவல் துறை அனுமதி தர மறுத்ததால் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று விநாயகர் சிலையை கொண்டு வந்து, விழா கொண்டாடுவதால் உள்ளூர் காவலர்களுக்கும், அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்தது. 13.09.2013 ம் தேதி சுப்பையா நாடார் அரசு மேல்நிலைபள்ளி அருகே வடபுறம் சுமார் 200 மீ தொலைவில் காலை 9.00 மணியளவில் அ.,சா.1 ராமதாஸ் ராஜா மற்றும் அருள்ராஜ் ஆகியோர்களிடம் பேசி கொண்டிருந்தார்.

2) அப்போது டாடா சுமோ காரில் வந்த கிழக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் மூக்கன், சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார், சூலக்கரை சார்பு ஆய்வாளர்

பார்த்திபன் ஆகியோர்கள் காரில் இருந்து இறங்கி வந்து ராமதாஸ் பார்த்து நீ இந்து முன்னணி அமைப்பில் இருந்தால் பெரிய இவனாடா தாயோழி மவனே உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என சொல்லி கழுத்தை பிடித்து 3 பேரும் நெறித்து அடித்தனர், அதில் அ.சா.1ன் சட்டை கிழிந்து கீழே விழுந்தார். மேற்படி 3 பேரும் கை மற்றும் காலால் அ.சா.1 ஐ அடித்து மிதித்தனர். அ.சா.1 ஐ பார்த்து நீ உயிருடன் இருந்தால் தானே இயக்க வேலைகளை செய்வாய் என கூறி துப்பாக்கியை நெற்றியில் வைத்து மிரட்டினார்கள். மீண்டும் அடித்ததில் அ.சா.1 மயக்கமாகிவிட்டார். காவல் அதிகாரிகள் அவரை டாடா சுமோவில் ஏற்றி கிழக்கு காவல்நிலையம் கொண்டு சென்றனர். எங்கள் பகுதியை சேர்ந்தவர் என்பதால் நாங்கள் காவல்நிலையம் சென்று பார்த்தோம். ஜன்னல் வழியாக பார்த்த போது அங்கு வைத்தும் அ.சா.1 ஐ அடித்தனர். மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த போது நானும், ஈஸ்வரன், ஆண்டனி, பட்டமுத்து, கண்ணன் ஆகியோர்கள் இருந்தோம். அ.சா.1ன் மீது பொய் வழக்கு பதிவு செய்தனர். அ.சா.1 ஐ சிறையில் அடைத்தனர். அ.சா.1 பிணையில் வந்த பின்னர் காவல் துறையினர் மீது புகார் மனு கொடுத்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

3) நான் இந்து முன்னணி அமைப்பில் 30 வருடமாக உள்ளேன். அதன் மூலம் ராமதாஸ், ராஜா, பாண்டி, அருள்ராஜ் ஆகியோர்களை தெரியும் என்றால் சரிதான். அவர்களும் எங்கள் அமைப்பில் உள்ளனர். ஈஸ்வரன், ஆண்டனி, பட்டமுத்து, கண்ணன் ஆகியோர்கள் இந்து முன்னணி அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளனர். சம்பவ இடத்தில் நான் 20 நிமிடம் இருந்தேன். சம்பவ இடத்தில் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகள் உள்ளது என்றால் சரிதான், கடைகள் மற்றும் வீடுகள் இல்லை. சம்பவ நேரத்தில் பள்ளிக்கு வரும் மாணவர்கள், பெற்றோர்கள் மருத்துவமனைக்கு செல்லும் நபர்கள் உள்பட அதிக ஆட்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான், அன்றைய தினம் ஆட்கள் நடமாட்டம் இல்லை.

4) சம்பவம் நடக்கும் போது பொதுமக்கள் சுமார் 20 பேர்கள் கூடியிருந்தனர். சம்பவ இடத்தில் சுப்பையா நாடார் பள்ளி மாணவர்கள் யாரும் இல்லை. சம்பவ இடத்தில் நானும், ராஜா, அருள்ராஜ், அ.சா.1 ராமதாஸ் ஆகியோர்கள் இருந்தோம் என்றால் ஈஸ்வரன், பட்டமுத்து, ஆண்டனி, கண்ணன் ஆகியோரும் இருந்தனர். இந்து முன்னணி அமைப்பில் இருந்து விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடுவதற்காக சுப்பையா நாடார் பள்ளி மாணவர்களை அழைத்து வந்து மறியல் செய்தோம் என்றும், அதன் தகவல் கிடைத்து போலிசார் சம்பவ இடம் வந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் அ.சா.1 ஐ போலிசார்கள் அடித்து துப்பாக்கியை வைத்து மிரட்டிய விபரம் அங்கு கூடியிருந்து 20 நபர்களுக்கும் தெரியும் என்றால் சரிதான். கனம் நீதித்துறை நடுவர் எண்.2, விருதுநகரில் நான் ஏற்கனவே 05.07.2014 ம் தேதி இவ்வழக்கில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். சாட்சியத்தில் 3 பேரும் தாயோழி மவனே உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என பேசி கழுத்தை பிடித்து மிரட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

5) விநாயகர் சிலையை வீதியில் வைத்து கொண்டு வரும் போது காவல் துறை அனுமதி தர மறுத்ததால் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று விநாயகர் சிலையை கொண்டு வந்து, விழா கொண்டாடுவதால் உள்ளூர் காவலர்களுக்கும், அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்தது என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. அ.சா.1 ஐ பார்த்து நீ உயிருடன் இருந்தால் தானே இயக்க வேலைகளை செய்வாய் என கூறி துப்பாக்கியை நெற்றியில் வைத்து மிரட்டினார்கள். மீண்டும் அடித்ததில் அ.சா.1 மயக்கமாகிவிட்டார் என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. காவல் அதிகாரிகள் ராமதாஸ், ராஜா, அருள்ராஜ் ஆகியோர்களை டாடா சுமோவில் ஏற்றி கிழக்கு காவல்நிலையம் கொண்டு சென்றனர் என்றால் ராமதாஸ்–ஐ மட்டும் அழைத்து

சென்றார்கள், ராஜா மற்றும் அருள்ராஜ் எங்களுடன் வந்துவிட்டனர். 3 பேரும் துப்பாக்கியை வைத்து மிரட்டினர்.

6) போலிசார் அடித்ததில் இரத்தகாயம் மற்றும் வீக்கம் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை, உள்காயம் இருந்தது. அ.சா.1 ஐ காவல்நிலையத்தில் தனி அறையில் வைத்து அடித்தனர். எங்கள் பகுதியை சேர்ந்தவர் என்பதால் நாங்கள் காவல்நிலையம் சென்று பார்த்தோம். ஜன்னல் வழியாக பார்த்த போது அங்கு வைத்தும் அ.சா.1 ஐ அடித்தனர் என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், சம்பவ இடத்தில் அன்றைய தினம் நான் இல்லை என்றும், அ.சா.1 இந்து முன்னணி அமைப்பை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ராமதாஸ், ராஜா, அருள்ராஜ் மற்றும் பாண்டி ஆகியோர்கள் பள்ளி மாணவர்களை அழைத்து வந்து மறியல் செய்தனர் என்றும், அதை கேட்ட போலிசாரை அசிங்கமாக பேசி அடித்து கொலை முயற்சி செய்தனர் என்றால் சரியல்ல. அதனால் அவர்கள் மீதுவழக்கு பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைத்தனர் என்றும், அந்த வழக்கில் இருந்து தப்புவதற்காக பொய்யாக எதிரிகள் மீது தனிப்புகார் கொடுத்துள்ளார் என்றும், எங்கள் அமைப்பை சேர்ந்தவர் என்பதால் அ.சா.1 க்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 காவல் அதிகாரிகளுக்கு புகார் மனு கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

Sessions .. .. Sessions Case No. 153 of 2014

Deposition of witness for { Prosecution PW3
Defence
Court

Name : ஆண்டனி
Father Name : ஜார்ஜ்
Village :விருதுநகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :51

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of March 2026.

எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை -</u>**

1) நான் தற்போது விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் வடை வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ராமதாஸ், அ.சா.2 ராமச்சந்திரன் ஆகியோர்களை தெரியும். அ.சா.1 ராமதாஸ் பாண்டியன் நகரை சேர்ந்தவர், இந்து முன்னணி அமைப்பில் உள்ளார். விநாயகர் சதுர்த்தி விழாவை சிறப்பாக நடத்துவார். விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு போலிசார் அனுமதி தர மறுத்ததால் உயர் அதிகாரிகளிடம் முறையிட்டு அனுமதி பெற்று விழாவை அ.சா.1 நடத்துவதால் அ.சா.1 ன் மீது போலிசார் கோபத்தில் இருந்தனர். 13.09.2013 ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் நான் வேலை சென்று கொண்டிருந்தேன். அப்போது 3 போலிசார்கள் மூக்கன், சுரேஷ்குமார் மற்றும் பார்த்திபன் ஆகியோர்கள் சுப்பையா நாடார் பள்ளிக்கு வடபுறம் சுமார் 20 மீ தொலைவில்

அ.சா.1 ராமதாஸ்–ஐ அடித்து கொண்டிருந்தனர்.

2) மேற்படி 3 பேரும் அ.சா.1ன் கழுத்தைபிடித்து நெறித்து சட்டையை பிடித்து, துப்பாக்கியை வைத்து மிரட்டினர். இனிமேல் நீ இந்து முன்னணி அமைப்பில் பொறுப்பில் இருக்ககூடாது என கூறி கழுத்தை பிடித்து நெறித்ததால் அ.சா.1 அந்த இடத்தில் மயங்கி விழுந்துவிட்டார். அப்போது 3 பேரும் தேவிடியா மவனே என்று பேசி ஷீவால் அ.சா.1 ஐ மிதித்து சட்டையை கிழித்தனர். டாடா சுமோ வாகனம் வந்தது, அதில் அ.சா.1 ஐ ஏற்றி கிழக்கு காவல்நிலையம் கொண்டு சென்றனர். நான் கடையில் சொல்லிவிட்டு கிழக்கு காவல்நிலையம் சென்றேன். காவல்நிலைய ஹாலில் வைத்து அ.சா.1 ஐ அடித்தனர். சம்பவத்தை நானும், ராமச்சந்திரன், ஈஸ்வரன் ஆகியோர்கள் பார்த்தோம். இது சம்மந்தமாக ஏற்கனவே கனம் நீதித்துறை நடுவர் எண்.2, விருதுநகரில் சாட்சியம் அளித்தேன். அதன் பின்னர் அ.சா.1 ஐ மதுரை சிறையில் அடைத்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) சம்பவ இடத்தில் நானும், ராமச்சந்திரன், ஈஸ்வரன் ஆகியோர்கள் இருந்தோம், எங்களை தவிர வேறு யாரும் இல்லை என்றால் பொதுமக்கள் சுமார் 10 நபர்கள் இருந்தனர். அ.சா.1 ஐ சுமார் 20 நிமிடங்கள் 3 பேரும் அடித்தனர். கீழே விழுந்த அ.சா.1 ஐ ஷீவால் 3 பேரும் மிதித்தனர்.அதனால் அ.சா.1 க்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். 05.07.2014 ம் தேதி இவ்வழக்கில் கனம் நீதித்துறை நடுவர் எண்.2, விருதுநகரில் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த சாட்சியத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவை சிறப்பாக நடத்துவார். விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு போலிசார் அனுமதி தர மறுத்ததால் உயர் அதிகாரிகளிடம் முறையிட்டு அனுமதி பெற்று விழாவை அ.சா.1 நடத்துவதால் அ.சா.1ன் மீது போலிசார் கோபத்தில் இருந்தனர் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன்.

4) சம்பவ சம்பவத்தில் சம்பவ இடத்தில் ஆட்கள் நடமாட்டம் இருந்தது

என்றால் சரிதான். அ.சா.1 ஐ போலிசார் தேவிடியா மவனே என்று அசிங்கமாக பேசிய விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். நான் கடையில் சொல்லிவிட்டு கிழக்கு காவல்நிலையம் சென்றேன். அந்த சாட்சியத்தில் காவல்நிலைய ஹாலில் வைத்து அ.சா.1 ஐ அடித்தனர் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ராமதாஸ் மற்றும் அ.சா.2 ராமச்சந்திரன் ஆகியோர்கள் எனக்கு 20 வருடமாக பழக்கம். போலிசார் அடித்ததில் அ.சா.1 மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லவில்லை. அசா.1 இந்து முன்னணி அமைப்பு சார்பில் பள்ளி மாணவர்களை அழைத்து சென்று மறியல் செய்தார் என்றும், அதை தடுப்பதற்காக சார்பு ஆய்வாளர் சுரேஷ் வந்தார் என்றும், அவரை அசா.1 ராமதாஸ், பாண்டி, அருள்ராஜ் ஆகியோர்கள் அசிங்கமாக பேசி அடித்து கொலை முயற்சி செய்தனர் என்றும், அதனால் அவர்கள் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் இருந்து தப்புவதற்காக எதிரிகள் மீது பொய்யாக தனிப்புகார் கொடுத்துள்ளார் என்றும், அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் 3 பேரும் சேர்ந்து அ.சா.1 ஐ அசிங்கமாக பேசவில்லை என்றும், ஷீவால் மிதிக்கவில்லை என்றும், அடித்து சட்டையை கிழிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் அங்கு கூடியிருந்த பொதுமக்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 153 of 2014

Deposition of witness for { Prosecution PW4
Defence
Court

Name : ஈஸ்வரன்
Father Name :முக்கையா
Village :விருதுநகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :73

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of March 2026.

எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பாரதீய ஜனதா கட்சியில் நகர தலைவராக பொறுப்பில் இருந்தேன். அ.சா.1 ராமதாஸ் இந்து முன்னணி அமைப்பில் இருந்தார். இந்து முன்னணி, பாரதீய ஜனதா, சங்பரிவார் உள்ளிட்ட அமைப்புகள் சேர்ந்து விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாடுவோம். அ.சா.1 ராமதாஸ் பாண்டியன் நகர் பொறுப்பாளர் ஆவார். விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு போலிசார் அனுமதி தர மறுப்பதால் உயர் அதிகாரிகளிடம் முறையிட்டு அனுமதி பெற்று விழாவை நடத்துவதால் அ.சா.1 ராமதாஸ் மீது போலிசார் கோபத்தில் இருந்தனர். கடந்த 13.09.2013 ம் தேதி காலை 9.00 மணியளவில் தற்செயலாக விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக சுப்பையா நாடார் பள்ளி அருகே சென்ற போது அ.சா.1 ராமதாஸ்

பள்ளியில் படிக்கும் மாணவரிடம் பேசி கொண்டிருந்தார்.

2) அப்போது மூக்கன், சுரேஷ் மற்றும் பார்த்திபன் ஆகிய காவலர்கள் வந்தனர். அவர்கள் அ.சா.1 ராமதாஸ்–ஐ பார்த்து என்ன செய்து கொண்டிருக்கிறாய் இங்கு ஏன் நிற்கிறாய் என கேட்டனர், அதற்கு அ.சா.1 தனது உறவினர் பையன்களிடம் பேசி கொண்டிருப்பதாக கூறினார். அவர்கள் 3 பேரும் சேர்ந்து ராமதாஸ்–ஐ செல்லுமாறு மிரட்டினார்கள். நீ இந்து முன்னணியில் பெரிய ஆளா என்று கேட்டு 3 பேரும் அ.சா.1ன் கழுத்தை பிடித்துநெறித்தனர். அப்போது உன்னை உயிருடன் இருந்தால் தானே ஆட்டம் போடுவாய் என கூறி அடித்தனர். கழுத்தை பிடித்து நெறித்து கொல்லாமல் விடமாட்டேன் என கூறினார்கள். அ.சா.1 மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த பின்னரும் பூட்ஸ் காலால் அ.சா.1ன் முகம், நெஞ்சு, முதுகு, கால் ஆகியவற்றில் மிதித்தனர். நான் எதிரிகளிடம் அ.சா.1ஐ அடிப்பது தவறு என சொன்னேன். அதற்கு நீ யாரு கேட்க போ என்று கூறினர். உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என துப்பாக்கியை எடுத்து அ.சா.1ன் நெற்றியில் வைத்து மிரட்டினார்கள். அ.சா.1ஐ துாக்கி ஏற்கனவே வந்திருந்த வாகனத்தில் ஏற்றி கிழக்கு காவல்நிலையம் கொண்டு சென்றனர். காவல்நிலையம் சென்று அ.சா.1 தவறு செய்யவில்லை அவரை விடுமாறு சொன்னோம், அ.சா.1ஐ ஜட்டியுடன் உட்கார வைத்திருந்தனர். சட்டபடி நடவடிக்கை எடுப்பதாக சொல்லி அ.சா.1ஐ நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தனர். அ.சா.1ன் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்தனர். பின்னர் மதுரை மத்திய சிறைசாலையில் அடைத்தனர். அ.சா.1 வெளியே வந்த பின்னர் உயர் அதிகாரிகளுக்கு நடந்த சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்தார். இது சம்மந்தமாக ஏற்கனவே கனம் நீதித்துறை நடுவர் எண்.2, விருதுநகரில் சாட்சியம் அளித்தேன். சுப்பையா நாடார் பள்ளி அருகே நானும், ஆண்டனி, ராமச்சந்திரன், மற்றும் 3 நபர்கள் இருந்தோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நான் பாரதீய ஜனதா கட்சியில் மாவட்ட தலைவராக 3 வருடம் இருந்தேன். ராமதாஸ், ராஜா, அருள்ராஜ் ஆகியோர்கள் இந்து முன்னணி அமைப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னபடி என்னுடன் இருந்த ராமச்சந்திரன், மற்றும் 3 நபர்கள் இந்து முன்னணி அமைப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மகப்பேறு மருத்துவமனை, அரசு மருத்துவமனை, பள்ளி மற்றும் வேலைக்கு செல்பவர்கள் அதிகமாக வந்து செல்லும் இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை, என்னுடன் வந்தவர்கள் தான் சுமார் 12 நபர்கள் இருந்தனர். மேற்படி 12 நபர்கள் முதல் விசாரணையில் சொன்னவர்கள் என்றால் சரிதான். அ.சா.1 ராமதாஸ்–ஐ பார்த்து என்ன செய்து கொண்டிருக்கிறாய் இங்கு ஏன் நிற்கிறாய் என கேட்டனர் என்றும் அதற்கு அ.சா.1 தனது உறவினர் பையன்களிடம் பேசி கொண்டிருப்பதாக கூறினார் என்றும் அவர்கள் 3 பேரும் சேர்ந்து ராமதாஸ்–ஐ செல்லுமாறு மிரட்டினார்கள் என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். உன்னை உயிருடன் இருந்தால் தானே ஆட்டம் போடுவாய் என கூறி அடித்தனர் என்றும் அ.சா.1 மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார் என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். கீழே விழுந்த பின்னரும் பூட்ஸ் காலால் அ.சா.1ன் முகம், நெஞ்சு, முதுகு, கால் ஆகியவற்றில் மிதித்தனர் என்றும் நான் எதிரிகளிடம் அ.சா.1ஐ அடிப்பது தவறு என சொன்னேன் என்றும் அதற்கு நீ யாரு கேட்க போ என்று கூறினர் என்றும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என துப்பாக்கியை எடுத்து அ.சா.1ன் நெற்றியில் வைத்து மிரட்டினார்கள் விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேன்.

4) அ.சா.1ஐ 3 பேரும் சேர்ந்து சுமார் 10 நிமிடம் அடித்தனர். யார், யார் அ.சா.1ஐ எங்கு எங்கு அடித்தனர் என்று குறிப்பாக சொல்லமுடியாது என்றால்

சரிதான், ஒரே நேரத்தில் 3 பேரும் அ.சா.1 ஐ அடித்தனர். அ.சா.1 ஐ போலிசார் அடித்ததில் உடல் முழுவதும் இரத்தகாயம் இருந்தது என்றால் ஊமைக்காயம் ஏற்பட்டது. பாரதீய ஜனதா கட்சி மற்றும் இந்து முன்னணி அமைப்பும் ஒரே அமைப்பாகும். போலிசார் ராமதாஸ்–ஐ மட்டும் ஜீப்பில் அழைத்து சென்றனர். நான் மட்டும் காவல்நிலையம் சென்றேன், என்னுடன் வேறு யாரும் காவல்நிலையம் வரவில்லை. காவல்நிலையம் சென்று அ.சா.1 தவறு செய்யவில்லை அவரை விடுமாறு சொன்னேன் என்றும், அ.சா.1 ஐ ஜட்டியுடன் உட்கார வைத்திருந்தனர் என்ற விபரத்தை ஏற்கனவே அளித்த சாட்சியத்தில் சொல்லியுள்ளேன்.

5) 13.09.2013 ம் தேதி சுப்பையா நாடார் பள்ளி அருகே பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து இந்து முன்னணி அமைப்பில் சார்பில் மறியல் செய்தார் என்றால் சரியல்ல. இந்த தகவலை கேட்டு வந்த சார்பு ஆய்வாளர் சுரேஷ்–ஐ அ.சா1 ராமதாஸ், ராஜா, அருள்ராஜ், பாண்டி ஆகியோர்கள் அசிங்கமாக பேசி அடித்து, கொலை செய்ய முயன்றதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அது பொய் வழக்காகும், அந்த வழக்கில் இருந்து தப்புவதற்காக அ.சா.1 பிணையில் வந்த பின்னர் எதிரிகள் மீது பொய்யாக தனிப்புகார் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் பாரதீய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவராக இருந்ததால் அ.சா.1 க்கு ஆதரவாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், நான் அன்றைய தினம் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் பொய் என்றும், அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிலயல்ல. முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.